A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை:திரு. செ. தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**
**மேல்முறையீட்டு மனு எண் 43 / 2020**

**BY RPAD**

திருமதி. ர. பவானி,
க/பெ. சி. ரவீந்திரன்,
வேம்பங்குடி கிழக்கு, கீரமங்கலம்,
அறந்தாங்கி தாலுக்கா,
புதுக்கோட்டை மாவட்டம் – 614 624.

... மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு. சி. ரவீந்திரன்)

எதிர்

செயற்பொறியாளர்/இ&கா,
புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
37, ரங்கோஜி பவ தெரு, அக்ரஹாரம்,
அறந்தாங்கி – 614 624.

. . . எதிர்மனுதாரர்
(திரு.R.முரளிராமலிங்கம், செயற்பொறியாளர்/அறந்தாங்கி)

**கேட்புரை நாள்: 05–11–2020**

**ஆணை நாள் : 12–02–2021**

13.08.2020 அன்று பெறப்பட்ட திருமதி. ர. பவானி, க/பெ. சி. ரவீந்திரன், வேம்பங்குடி கிழக்கு, கீரமங்கலம், அறந்தாங்கி தாலுக்கா, புதுக்கோட்டை மாவட்டம் – 614 624அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 43/2020 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 05.11.2020 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

## 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு எண் 133–008–46–ல் வகிக்கப்பட்ட நிலுவைத் தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க கோரி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்.

## 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான நார் உரிக்கும் தொழிற்சாலையில் உள்ள மின்இணைப்பு எண் 133–008–46–ல் மின் மீட்டர் பழுதடைந்த காரணத்தினால் மின் மீட்டருக்கு பணம் செலுத்தியும், மீட்டர் பொருத்தாமலும், கஜா புயலில் பாதிப்படைந்து மின் பயனீட்டே இல்லாமல் 10 மாதங்களாக தொழிற்சாலை இயங்காமல் இருந்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.2 மூலப்பொருள் தட்டுபாடு ஏற்பட்ட காரணத்தினால் தொழிற்சாலை இயங்குவதை நிறுத்திவிட்டதாகவும் மேலும் உதவி மின்பொறியாளர்/இ&கா/வடக்கு/கீரமங்கலம் அவர்களிடமிருந்து நிலுவைத் தொகையாக ரூ.25,628/– செலுத்துமாறு கடிதம் பெற்றதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.3 மேற்படி நிலுவைத் தொகையை நீக்க கோரிக்கை விடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் மேல்முறையீட்டாளர் புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டம் 20.03.2020 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 மன்றத்தின் தீர்வு –

மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டம் தன்னுடைய தீர்வை 20.03.2020 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

“*__மன்றத்தின் தீர்வு__*

*“மனுதாரர் திருமதி. ரா.பவானி அவர்களது மின் இணைப்பு எண் **133–008–46–ல்** உள்ள மின் மீட்டரானது 50-100A whole current static meter ஆகும். மேற்கண்ட மின் மீட்டரில் ஒரு Phase incoming வயர் கருகிய நிலையில் துண்டிக்கப்பட்டு இருந்ததாக கணக்கீட்டாளரும், உதவி மின்பொறியாளர்/இ&கா/வடக்கு கீரமங்கலம் அவர்களும் கண்டறிந்து ‘Meter Burnt’ என கணினியல் பதிவு செய்துள்ளனர். மீட்டருக்குண்டான தொகையான ரூ.**3,129/–** நுகர்வோரால் **06.09.2018–ல்** செலுத்தப்பட்டுள்ளது.*

*Whole current meter–ல் ஒரு Phase வயர் கருகி துண்டிக்கப்பட்டு இருக்கும் பட்சத்தில் நுகர்வோரால் மும்முனை மோட்டார் இயக்க இயலாது. மேலும், நுகர்வோர் ஒரு முனை மோட்டார்கள் மட்டுமே பயன்படுத்தியிருந்தாலும், இரண்டு முனைகளிலுலும் (Two Phase) மின் பயனீட்டு அளவு சரியானதாகவே இருக்கும். மேற்கண்ட மீட்டரில் Terminal மட்டுமே burnt ஆகி துண்டிக்கப்பட்டுள்ளது. Meter Burnt ஆகவில்லை. Display ஏதும் பாதிக்கப்படவில்லை. மின் பயனீட்டு அளவும் எடுக்கப்பட்டுள்ளது. Terminal cover seal ஏதும் cut ஆகவில்லை. (Seal உள்ளது) ஆதலால் மின் வருவாய் இழப்பீடு ஏதும் இருக்க வாய்ப்பு இல்லை. மேலும் மீட்டர் கழற்றப்பட்டவுடன் மின்னளவி சோதனைக் கூடத்தில் ஒப்படைத்து சோதனை அறிக்கை பெறப்படவில்லை.*

*05/2018, 07/2018, 09/2018 ஆகிய கணக்கீட்டு மாதங்களில் நுகர்வோர் பயன்படுத்திய மின் பயனீட்டு அளவு சரியானதாகும். ஆகவே மேற்கண்ட கணக்கீட்டு மாதங்களுக்கு சராசரி கணக்கீட்டு நிலுவைத் தொகை செலுத்த அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது தவறானது என கருதி மின் நுகர்வோர் குறைதீர் மன்றம் சராசரி தொகையாக கணக்கிடப்பட்டுள்ள ரூ.**25,628** (ரூபாய் இருபத்து ஐந்தாயிரத்து அறனூற்று இருபத்து எட்டு மட்டும்)–ஐ ரத்து செய்கிறது. மின் மீட்டரானது **19.01.2019–ல்** தான் மாற்றப்பட்டுள்ளது.*

*கஜா புயலில் தொழிற்சாலை பாதிப்படைந்தால் மின் நுகர்வோர் பயனீடு செய்ததால், மின் பயனீட்டு அளவு ‘0’ என ஏற்றுவதற்கு பதிலாக Final Meter Reading ‘0’ என கணினியில் பதிவு செய்யப்பட்டதால் **01/2019–ம்** கணக்கீட்டு மாதத்திற்கு ரூ. **12,621/–** கட்டணத் தொகை வந்துள்ளது தவறானது.*

*ஆகவே, மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் கலந்தாய்வு முடிவின்படி, மறு மின் இணைப்பிற்கு செலுத்த வேண்டிய கட்டணத் தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்படுகிறது.*

| | |
|---|---|
| *11/2018 கணக்கீட்டு மாத மின் கட்டண பாக்கி* | *ரூ.14,011.00* |
| *01/2019 கணக்கீட்டு மாத மின் குறைந்தபட்ச கட்டணம்* | *ரூ. 2,940.00* |
| *6 மாதங்களுக்கான மாதாந்திர கட்டணம்* | *ரூ. 8,820.00* |
| *மறு இணைப்புக் கட்டணம்* | *ரூ. 100.00* |
| *சோதனைக் கட்டணம்* | *ரூ. 75.00* |
| *11/2018 மாத கணக்கீட்டிற்கு வட்டி (1.5%)* | *ரூ. 3,152.00* |
| *01/2019 மாத கணக்கீட்டிற்கு வட்டி (1.5%)* | *ரூ. 573.00* |
| | -------- |
| *ஆக மொத்தம்* | *ரூ.29,672/–* |
| | -------- |

*(ரூபாய் இருபத்து ஒன்பதாயிராத்து அறநூற்று எழுபத்து ஒன்று மட்டும்)*

*ஆகவே, மனுதாரர் மேற்கண்ட தொகையான ரூ.29,671/—ஐ செலுத்தி மறு மின் இணைப்பு பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்து மனு எண் 05/2019—20 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.''*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>**

**4.1** மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 05.11.2020 அன்று காணொளி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

**4.2** மேல்முறையீட்டாளர் சார்பாக திரு. சி. ரவீந்திரன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

**4.3** எதிர்மனுதாரர் திரு.R.முரளிராமலிங்கம், செயற்பொறியாளர்/அறந்தாங்கி, புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டம் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

**4.4** மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின் குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:</u>**

**5.1** மேல்முறையீட்டாளர் மட்டை அடித்து நார் உறிக்கும் தொழிற்சாலை கஜா புயலில் சேதமடைந்து விட்டதாகவும் பழுதடைந்த மின் மீட்டருக்கு புதிய மீட்டர் வழங்க பணம் செலுத்தியும் கீரமங்கலம் EB-ல் மீட்டர் இல்லை என்ற ஒரே காரணத்தினால் ரூபாய் 4000 பில் செலுத்த வேண்டியதற்கு பதிலாக ரூ.14,100/— ஆவரேஜ் போட்டு 3 பீஸ் கேரியரை கழற்றி சென்று தொழிற்சாலை 20 மாதம் இயங்க விடாமல் தடுத்து விட்டதாக தெரிவித்துள்ளார்.

**5.2** நெதர்லாந்து கம்பெனியில் தென்னைமட்டை வெட்டி ஏற்றுமதி செய்வதற்காக மூன்று வருட ஆர்டர் பெற்று அதை உற்பத்தி செய்வதற்காக மிகை மின்சாரம் 11KW கேட்டு

விண்ணப்பித்து மூன்று வருட காலதாமதம் முடிந்து மின்சாரம் கிடைக்கப்பெற்றது. ஆனால் ஆர்டர் கைவிட்டு போனதாக தெரிவித்து EB-யில் வழங்கப்பட்ட மின்மாற்றியை (Transformer) குளத்தங்கரையில் நிறுவுமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

5.3 கடந்த 20 வருடங்களாக தொழில்சாலை இயங்கி வந்த நிலையில் எந்த தவறும் செய்யாத தன்னை மீட்டர் இல்லை என்ற ஒரே காரணத்தினால் கடந்த 18 மாதங்களாக மின்இணைப்பு இல்லாமல் தனது இயந்திரங்கள் துரு ஏரி இனி பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாகவும், இவற்றை புதிதாக செய்வதற்கு ரூ.2,30,000/– செலவாகும் எனவும், இந்த தொகையினை ஈடு செய்வதற்கு இனி வரும் காலங்களில் வரும் மின் கட்டணத்தில் தள்ளுபடி செய்து தருமாறும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 ஆவரேஜ் கட்டணம் போடும்போது கூடுதலாக உபயோகித்த 1860 யூனிட்டும் குறைவாக உபயோகித்த 73 யூனிட்டும் சேர்த்து இரண்டாக பிரித்து போடுவதற்கு பதிலாக தங்கள் விருப்பத்திற்கு போடப்பட்டுள்ளதை கருத்தில் கொள்ளவும். மேலும் 6 மாத வாடகையினையும், போடப்பட்டுள்ள வட்டியினையும் தள்ளுபடி செய்து தருமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார். தொழிற்சாலை மூடுவதால் அதனை நம்பி இருக்கும் அனைவரின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படுவதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 ஆவரேஜ் போடும்போது கடைபிடிக்கப்படும் ஒரு வருடத்தில் ஆக கூடுதலாக ஓடியதும் குறைவாக ஓடியதும் சேர்த்து இரண்டாக பிரித்து அதையே கூடுதலாக ரூ.15045 குறைவு ரூ.2,801/– கூட்டினால் வரும் ரூ.17,846–ல் அரைவாசி ரூ.8,923/–. ஆனால் ரூ14,011/– போட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்:</u>**

6.1 திருமதி. ர. பவானி க/பெ. சி. ரவீந்திரன், வேம்பங்குடி கிழக்கு, கீரமங்கலம், அவர்கள் தனது தொழிற்சாலைக்குரிய மின்இணைப்பு எண் 133–008–46–ல் உள்ள மின்பளுவை 31 கி.வாட்டிலிருந்து 42 கி.வாட் ஆக அதிகரித்து கோரியதன் அடிப்படையில் ஏற்கனவே உள்ள (10-50 Amps) திறன் கொண்ட மின் மீட்டர் கழற்றப்பட்டு (50-100 Amps) திறன் கொண்ட மின் மீட்டர் கடந்த 03.05.2018–ல் பொருத்தப்பட்டு மின்பளு உயர்த்தப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 05/2018 மற்றும் 07/2018 கணக்கீட்டு மாதங்களுக்கு முன்னர் (மின் பளு அதிகரிப்பதற்கு முன்பு) சராசரியாக நுகர்வோரின் மின் பயனீட்டு அளவு 1500 யூனிட்டுகள் முதல் 5650 யூனிட்டுகள் வரை இருந்துள்ளது. 09/2018 கணக்கீட்டு மாதத்திற்கு கணக்கீடு செய்ய செல்லும்போது மீட்டருக்குச் செல்லும் மும்முனை வயர்களில் ஒரு முனைக்கு உள்ள வயர் உருகியநிலையில் துண்டிக்கப்பட்டு இருப்பதைக் கண்டறிந்து உதவி மின்பொறியாளர்/இ&கா/ வடக்கு / கீரமங்கலம் அவர்களுக்கு கணக்கீட்டாளர் தெரிவித்துள்ளார். அதனைத் தொடர்ந்து உதவி மின்பொறியாளர் அவர்களும், மேற்கண்ட மின்இணைப்பில் உள்ள மீட்டரை நேரில் ஆய்வு செய்து மீட்டரில் ஒருமுனை வயர் உருகி மீட்டர் பாதிப்படைந்துள்ளதை உறுதி செய்துபின் மீட்டருக்கு உண்டான கட்டணத்தொகை ரூ.3129/– 06.09.2018 அன்று மனுதாரரிடம் பெறப்பட்டுள்ளது.

6.3 பழுதடைந்த மீட்டரை மாற்றி புதிய மீட்டர் பொருத்துவதற்கு மீட்டர் இல்லாத காரணத்தினால் 11/2018 கணக்கீட்டு மாதத்திற்கு (Average) சராசரி மின்பயனீட்டு அளவு [(1860+1440)/2]=1650 யூனிட்டுகள் கணக்கிடப்பட்டு மின்கட்டணத்தொகையாக ரூ. 14,011/– 14.11.2018 அன்று கணினியில் புதிவு செய்யப்பட்டது. 16.11.2018–ல் கஜாபுயலில் மேற்கண்ட மின்இணைப்பிற்கான தொழிற்சாலை பழுதடைந்த நிலையில் இருந்ததால் மீண்டும் மின் சீரமைப்பு செய்து புதிய மீட்டர் 19.01.2019 அன்று பொருத்தப்பட்டது. 01/2019 கணக்கீட்டு மாதத்திற்கு மின்பயனீடு இல்லாத காரணத்தினால் மின் பயனீட்டு அளவு 0 என கணினியில் பதிவு செய்யப்பட்டபோது, கணினியில் மின் கட்டணத்தொகை ரூ.12,621/– என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6.4 மேல்முறையீட்டாளருக்கு 04.02.2019 அன்று மின் கட்டண நிலுவைத் தொகை ரூ.25,628/– 11/2018 மாதாந்திர மின் கட்டணத்தொகை ரூ.14,306/– மற்றும் 01/2019 மாதாந்திர மின் கட்டணத்தொகை ரூ.12,621/– ஆக மொத்தம் ரூ.52,555/– (ரூபாய் ஐம்பத்தி இரண்டாயிரத்து ஐநூற்று ஐம்பத்து ஐந்து மட்டும்) செலுத்துமாறு உதவி மின்பொறியாளர்/இ&கா/வடக்கு/ கீரமங்கலம் அவர்களால் கடிதம் அனுப்பப்பட்டது. மேற்கண்ட தொகையை செலுத்தாத காரணத்தால் 20.03.2019 அன்று மின்துண்டிப்பு செய்யப்பட்டது.

6.5 மேலும் மேல்முறையீட்டாளர் தனது 22.09.2020 தேதியிட்ட கடிதத்தில் 42kw ஐ 10kw-ஆக மின்பளுவை குறைக்க வேண்டியுள்ளார். மின்பளுவை குறைக்க வேண்டுமெனில் உரிய விண்ணப்பத்துடன் அதற்குரிய கட்டணம் செலுத்தும் பட்சத்தில் வாரிய விதிமுறைகளின்படி

மின்பளுவை குறைக்க முடியும். மேலும், மேல் முறையீட்டாளரின் கடிதம் இணைக்கப்பட்டு மேற்பார்வை பொறியாளர்/ புதுவை மின்பகிர்மான வட்டம்/புதுக்கோட்டை அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. எனவே, மேற்படி விளக்கங்களை ஏற்றுக்கொண்டு மனுதாரரின் மேல்முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்ய உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## 7.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு:</u>

7.1 மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோருடைய வாதங்கள் மற்றும் கொடுக்கப்பட்டுள்ள ஆவணங்கள் ஆகிவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் தன்னுடைய வாதத்தில் மின் இணைப்பு எண் 133–008–46–ல் செயல்பட்டுவரும் தன்னுடைய மட்டை அடித்து நார் உறிக்கும் தொழிற்சாலை கஜா புயலில் சேதமடைந்து விட்டதாகவும் பழுதடைந்த மின் மீட்டருக்கு புதிய மீட்டர் வழங்க பணம் செலுத்தியும் கீரமங்கலம் EB-ல் மீட்டர் இல்லை என்ற ஒரே காரணத்தினால் ரூபாய் 4000 பில் செலுத்த வேண்டியதற்கு பதிலாக ரூ.14,100/– சராசரி போட்டு 3 பீஸ் கேரியரை கழற்றி சென்று தொழிற்சாலை 20 மாதம் இயங்க விடாமல் தடுத்து விட்டதாக தெரிவித்துள்ளார்.

7.3 மேலும் சராசரி போடும்போது கடைபிடிக்கப்படும் ஒரு வருடத்தில் கூடுதலாக ஓடியதும் 1860 அலகுகள் (11/2017) மற்றும் குறைவாக ஓடியதும் 73 அலகுகள் (05/2018) சேர்த்து இரண்டாக பிரித்து போடாமல் 11/2017 மற்றும் 01/2018 ஆகிய காலங்களில் பதிவான பயன்பாட்டை கொண்டு சராசரியாக 1650 அலகுகள் என போடப்பட்டது தவறென்று தெரிவித்துள்ளார். ஆகையால் அதிகப்படியான சராசரி தொகை, 6 மாத வாடகை மற்றும் மொத்த தொகைக்கு போடப்பட்டுள்ள வட்டியினையும் தள்ளுபடி செய்து தருமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

7.4 எதிர்மனுதாரர் தன்னுடைய வாதத்தில் மேல்முறையீட்டாளர் தனது தொழிற்சாலைக்குரிய மின்இணைப்பு எண் 133–008–46–ல் உள்ள மின்பளுவை 31 கி.வாட்டிலிருந்து 42 கி.வாட் ஆக கடந்த 03.05.2018 அன்று உயர்த்தப்பட்டதாகவும், 05/2018 மற்றும் 07/2018 கணக்கீட்டு மாதங்களுக்கு முன்னர் நுகர்வோரின் மின் பயனீட்டு அளவு 1500 யூனிட்டுகள் முதல் 5650 யூனிட்டுகள் வரை இருந்துள்ளதாகவும், 09/2018 கணக்கீட்டு மாதத்திற்கு கணக்கீடு செய்ய செல்லும்போது மீட்டருக்குச் செல்லும் மும்முனை வயர்களில் ஒரு முனைக்கு உள்ள வயர் உருகியநிலையில் துண்டிக்கப்பட்டு இருப்பதைக் கண்டறிந்தாக தெரிவித்துள்ளார். அதனைத்

தொடர்ந்து உதவி மின்பொறியாளர் அவர்களும், மேற்கண்ட மின்இணைப்பில் உள்ள மீட்டரை நேரில் ஆய்வு செய்து மீட்டரில் ஒருமுனை வயர் உருகி மீட்டர் பாதிப்படைந்துள்ளதை உறுதி செய்துபின் மீட்டருக்கு உண்டான கட்டணத்தொகை ரூ.3129/– 06.09.2018 அன்று மேல்முறையீட்டாளரிடம் பெறப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

7.5 பழுதடைந்த மீட்டரை மாற்றி புதிய மீட்டர் பொருத்துவதற்கு மீட்டர் இல்லாத காரணத்தினால் 11/2018 கணக்கீட்டு மாதத்திற்கு சராசரி மின்பயனீட்டு அளவு 1650 யூனிட்டுகள் கணக்கிடப்பட்டு மின்கட்டணத்தொகையாக ரூ. 14,011/– 14.11.2018 அன்று கணினியில் புதிவு செய்யப்பட்டதாகவும், 16.11.2018–ல் கஜாபுயலில் மேற்கண்ட மின்இணைப்பிற்கான தொழிற்சாலை பழுதடைந்த நிலையில் இருந்ததால் மீண்டும் மின் சீரமைப்பு செய்து புதிய மீட்டர் 19.01.2019 அன்று பொருத்தப்பட்டதாகவும், 01/2019 கணக்கீட்டு மாதத்திற்கு மின்பயனீடு இல்லாத காரணத்தினால் மின் பயனீட்டு அளவு 0 என கணினியில் பதிவு செய்யப்பட்டபோது, கணினியில் மின் கட்டணத்தொகை ரூ.12,621/– என கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 மேல்முறையீட்டாளருக்கு 04.02.2019 அன்று மின் கட்டண நிலுவைத் தொகை ரூ.25,628/– 11/2018 மாதாந்திர மின் கட்டணத்தொகை ரூ.14,306/– மற்றும் 01/2019 மாதாந்திர மின் கட்டணத்தொகை ரூ.12,621/– ஆக மொத்தம் ரூ.52,555/– செலுத்துமாறு உதவி மின்பொறியாளர்/இ&கா/வடக்கு/ கீரமங்கலம் அவர்களால் கடிதம் அனுப்பப்பட்டதாகவும், மேற்கண்ட தொகையை செலுத்தாத காரணத்தால் 20.03.2019 அன்று மின்துண்டிப்பு செய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

7.7 மேலும் மின்குறைதீர் மன்றத்தில் சராசரி குறைவுத்தொகை கணக்கீடு செய்யப்பட்ட 05/2018, 07/2018 மற்றும் 09/2018 ஆகிய காலங்கள் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், 01/2019 –ல் தவறுதலாக கணிணியில் பதிவு செய்யப்பட்ட ரூ.12,621/– நேர் செய்து குறைந்தபட்ச மாத கட்டணம் வசூல் செய்ய ஆணையிடப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். எனவே, குறைதீர் மன்ற ஆணையின்படி மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்ட ரூ.52,555/– கேட்பு தொகை மறுகணக்கீடு செய்யப்பட்டு ரூ.29,671/– ற்கு புதிய கேட்பு அறிவிக்கை செய்யப்பட்டுள்ளதால், மேல்முறையீட்டாளர் அந்த தொகையை செலுத்தி மறு இணைப்பு பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். ஆகவே மேற்கண்ட கணக்கீடு சரியானது என்பதால் மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்ய வேண்டியுள்ளார்.

7.8 மேற்கண்ட பத்திகளில் உள்ள வாதங்களின்படி குறைதீர் மன்ற உத்தரவின் மூலம் ஏற்கனவே மேல்முறையீட்டாளருக்கு 05/2018, 07/2018 மற்றும் 09/2018 ஆகிய காலங்களில் கேட்பு செய்யப்பட்ட சராசரி குறைவுத்தொகை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது. மேலும் 01/2019–ற்கான மின்கட்டண தொகையில் திருத்தப்பட்டு குறைந்தபட்ச நிலைக்கட்டணம் மட்டும் கோரப்பட்டுள்ளது. ஆனால் இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் 11/2018–ற்கான சராசரி குறைவுத்தொகையை மறுகணக்கீடு செய்யக்கோரியும், மாதாந்திர நிலைக்கட்டணங்களை தள்ளுபடி செய்யக்கோரியும் மேல்முறையீடு செய்துள்ளார்.

7.9 எதிர்மனுதாரர்களால் 11/2018 –ற்கான சராசரி குறைவுத் தொகை கணக்கீடு செய்யப்பட்டதை ஆராய்ந்த பொழுது அந்த காலகட்டத்திற்கான சராசரி குறைவுத்தொகை 11/2017 மற்றும் 01/2018 ஆகிய காலங்களில் பதிவான பயன்பாட்டை கொண்டு சராசரியாக 1650 அலகுகள் என போடப்பட்டுள்ளது. ஆனால் மேல்முறையீட்டாளர் மின்னளவி பழுதான காலகட்டத்திலும் அதற்கு முன்பும் தன்னுடைய பயன்பாடு மிகவும் குறைந்த அளவே பயன்படுத்தியதாகவும் வாதுரையின்போது தெரிவித்துள்ளார்.

7.10 இவ்வழக்கில் மின்னளவி பழுது என்பதற்கு பரிசோதனை அறிக்கை எதுவும் இல்லை. மேலும், பதிவு இறக்கம் செய்யப்பட்ட தகவல்களும் இல்லை. மேற்கண்ட நிலையில் நான் 03/2018 முதல் 11/2018 வரையிலான காலத்தில் நுகர்வோர் பேரேட்டில் செய்யப்பட்டுள்ள பதிவுகளை ஆராய விரும்புகிறேன். அந்த பதிவுகளின்படி 14.11.2018 அன்று மின்னளவியில் பழுது ஏற்பட்டுள்ளது என பதிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கு முந்தைய காலங்களான 03/2018, 05/2018, 07/2018 மற்றும் 09/2018–ல் நுகர்வோரின் பயன்பாடுகள் முறையே 630, 73, 150 மற்றும் 990 அலகுகள் என பதிவுசெய்யப்பட்டுள்ளது. ஆனால் சராசரி குறைவுத்தொகை 11/2017 மற்றும் 01/2018 ஆகிய காலங்களில் உள்ள பதிவை கொண்டு கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது தமிழ்நாடு மின்வழங்கல் விதி 11(5)–ன்படி விதிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக நான் மின்குறைதீர் மன்றம் வழங்கியஆணையில் பக்கம் 4, பத்தி 2 மற்றும் 3–ல் உள்ள விவரங்களை ஆராய வேண்டும். சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *Whole current meter–ல் ஒரு Phase வயர் கருகி துண்டிக்கப்பட்டு இருக்கும் பட்சத்தில் நுகர்வோரால் மும்முனை மோட்டார் இயக்க இயலாது. மேலும், நுகர்வோர் ஒரு முனை மோட்டார்கள் மட்டுமே பயன்படுத்தியிருந்தாலும், இரண்டு முனைகளிலுலும (Two Phase) மின் பயனீட்டு அளவு சரியானதாகவே இருக்கும். மேற்கண்ட மீட்டரில் Terminal மட்டுமே burnt*

*ஆகி துண்டிக்கப்பட்டுள்ளது. Meter Burnt ஆகவில்லை. Display ஏதும் பாதிக்கப்படவில்லை. மின் பயனீட்டு அளவும் எடுக்கப்பட்டுள்ளது. Terminal cover seal ஏதும் cut ஆகவில்லை. (Seal உள்ளது) ஆதலால் மின் வருவாய் இழப்பீடு ஏதும் இருக்க வாய்ப்பு இல்லை. மேலும் மீட்டர் கழற்றப்பட்டவுடன் மின்னளவி சோதனைக் கூடத்தில் ஒப்படைத்து சோதனை அறிக்கை பெறப்படவில்லை.*

*05/2018, 07/2018, 09/2018 ஆகிய கணக்கீட்டு மாதங்களில் நுகர்வோர் பயன்படுத்திய மின் பயனீட்டு அளவு சரியானதாகும். ஆகவே மேற்கண்ட கணக்கீட்டு மாதங்களுக்கு சராசரி கணக்கீட்டு நிலுவைத் தொகை செலுத்த அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது தவறானது என கருதி மின் நுகர்வோர் குறைதீர் மன்றம் சராசரி தொகையாக கணக்கிடப்பட்டுள்ள ரூ.25,628/– (ரூபாய் இருபத்து ஐந்தாயிரத்து அறனூற்று இருபத்து எட்டு மட்டும்)–ஐ ரத்து செய்கிறது.*

7.11 மேற்கண்ட பத்திகளில் உள்ள விளக்கத்தின்படி மின்னளவியில் Display ஏதும் பாதிக்கப்படவில்லையென்றும், மின் பயனீட்டு அளவும் எடுக்கப்பட்டுள்ளது என்பதால் மின்வருவாய் இழப்பீடு ஏதும் இருக்க வாய்ப்பில்லை எனவும், 05/2018, 07/2018, 09/2018 ஆகிய கணக்கீட்டு மாதங்களில் நுகர்வோர் பயன்படுத்திய மின் பயனீட்டு அளவு சரியானதாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 05/2018–ற்கு பிறகு மேல்முறையீட்டாளர் குறைந்த அளவே மின்பயன்பாடு செய்துள்ளார் என அறியமுடிகிறது. எனவே, 11/2018–ற்கு தமிழ்நாடு மின்வழங்கல் விதி 11(2)–ன்படி 07/2018 மற்றும் 09/2018–ல் பதிவுசெய்யப்பட்ட நுகர்வோரின் பயன்பாட்டின்படி சராசரி குறைவுத்தொகை விதிக்கலாம் என தீர்வு செய்யப்படுகிறது.

7.12 மேலும் இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் மாதாந்திர நிலைக்கட்டணங்களை தள்ளுபடி செய்ய வேண்டுகிறார். மின்சார சட்டம், 2003ன்படி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மின் உற்பத்தி மற்றும் பகிர்மானத்திற்கான மின்கட்டணவீத ஆணையினை பிறப்பிக்கிறது. அவ்வப்போது பிறப்பிக்கப்படும் அந்த ஆணையின்படி மின்கட்டணம் மற்றும் மாதாந்திர நிலைக்கட்டணம் நுகர்வோரிடமிருந்து உரிமதாரரால் வசூலிக்கப்பட்டு வருகிறது. மேலும் மின்னிணைப்புகளைத் துண்டிக்கும் நேர்வில், மின் நுகர்வோர், மின் துண்டிப்பு காலங்களின் போது அந்தந்த வகைக்குப் பொருந்தக் கூடிய நிலைக்கட்டணங்களைச் (fixed charges) செலுத்துவதற்கு கடமைப்பட்டவராவர் என மின்கட்டண ஆணையில் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, மேல்முறையீட்டாளரின் மாதாந்திர நிலைக்கட்டணங்களை தள்ளுபடி செய்யக்கோரும் கோரிக்கை ஏற்புடையதல்ல என தீர்வு செய்யப்படுகிறது.

## 8.0 முடிவுரை

8.1 பத்தி 7–ல் உள்ள தீர்வுகளின்படி

1) மின்குறைதீர் மன்ற உத்தரவில் மின்னளவியில் Display ஏதும் பாதிக்கப்படவில்லையென்றும், மின்வருவாய் இழப்பீடு ஏதும் இருக்க வாய்ப்பில்லை எனவும் 05/2018, 07/2018 மற்றும் 09/2018 ஆகிய கணக்கீட்டு மாதங்களில் நுகர்வோர் பயன்படுத்திய மின் பயனீட்டு அளவு சரியானதாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 05/2018–ற்கு பிறகு மேல்முறையீட்டாளர் குறைந்த அளவே மின்பயன்பாடு செய்துள்ளார் என அறியமுடிகிறது. எனவே, 11/2018–ற்கு தமிழ்நாடு மின்வழங்கல் விதி 11(2)–ன்படி 07/2018 மற்றும் 09/2018–ல் பதிவுசெய்யப்பட்ட நுகர்வோரின் பயன்பாட்டின்படி சராசரி குறைவுத்தொகை விதிக்கலாம் என முடிவு செய்யப்படுகிறது.

2) மின்சார சட்டம், 2003ன்படி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மின் உற்பத்தி மற்றும் பகிர்மானத்திற்கான மின்கட்டணவீத ஆணையினை பிறப்பிக்கிறது. அவ்வப்போது பிறப்பிக்கப்படும் அந்த ஆணையின்படி மின்கட்டணம் மற்றும் மாதாந்திர நிலைக்கட்டணம் நுகர்வோரிடமிருந்து உரிமதாரரால் வசூலிக்கப்பட்டு வருகிறது. மேலும் மின்னிணைப்புகளைத் துண்டிக்கும் நேர்வில், மின் நுகர்வோர், மின் துண்டிப்பு காலங்களின் போது அந்தந்த வகைக்குப் பொருந்தக் கூடிய நிலைக்கட்டணங்களைச் (fixed charges) செலுத்துவதற்கு கடமைப்பட்டவராவர் என மின்கட்டண ஆணையில் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, மேல்முறையீட்டாளரின் மாதாந்திர நிலைக்கட்டணங்களை தள்ளுபடி செய்யக்கோரும் கோரிக்கை ஏற்புடையதல்ல என முடிவு செய்யப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வை நிறைவேற்றியது தொடர்பான அறிக்கையை இந்த ஆணை கிடைக்கப்பெற்ற 45 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் உத்தரவு இடப்படுகிறது.

8.3 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண்.43/2020 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்

1) திருமதி. ர. பவானி,
க/பெ. சி. ரவீந்திரன்,
வேம்பங்குடி கிழக்கு, கீரமங்கலம்,
அறந்தாங்கி தாலுக்கா,
புதுக்கோட்டை மாவட்டம் – 614 624.

2) செயற்பொறியாளர்/இ&கா,
புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
37, ரங்கோஜி பவ தெரு, அக்ரஹாரம்,
அறந்தாங்கி – 614 624.

3) மேற்பார்வை பொறியாளர், – By Mail
புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பழைய பேரூந்து நிலையம் அருகில்,
புதுக்கோட்டை – 622 001.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Mail
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5) செயலாளர், – By Mail
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.

6) உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.